**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 46/2008**
**நாள்.21.11.2025**
**பி.வா.சா.1- அரபுஅலி**
**த/பெ -  முகமது இப்ராகிம்**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ.14 கிரையப்பத்திரத்தில் கண்ட விஸ்தீரணத்திற்கு கூடுதலாக பி.வா.சா.ஆ.16 கிரையப்பத்திரத்தில் விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல, பி.வா.சா.ஆ.14 மற்றும் பி.வா.சா.ஆ.15ல் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்கு கூடுதலாக பி.வா.சா.ஆ.16ல் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி பி.வா.சா.ஆ.14, பி.வா.சா.ஆ.15 மற்றும் பி.வா.சா.ஆ.16ல் 2 அயிட்டங்களாக சொத்துவிவரங்கள் காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்படி 2 அயிட்டங்களில் முதல் அயிட்ட சொத்திற்கு ஒட்டி எனது தாயாரான பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் படி எனது தாயாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.1 தான் மூல ஆவணம் என்றால் சரிதான். அதில் நான்குமாலாக கிழமேலடி 32, தென்வடலடி 52 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 32க்கு 52 உள்ள விஸ்தீரணமானது செவ்வக வடிவிலானது என்றால் சரியல்ல, தென்புறம் கூர்மையான வடிவிலும், வடபுறமும் கூர்மையான வடிவிலும், கிழமேல் வட்டவடிவிலும் உள்ளது.

பி.வா.சா.ஆ.1ன் படி என் தாயாருக்கு கிடைத்த சொத்து நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் 1975/19 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாதிக்கு கிடைத்த சொத்தானது மேற்படி நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் 1975/20 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவை ஆட்சேபித்து மேல்முறையீடு எதுவும் என் தாயார் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவின் நகலையோ அல்லது அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலையோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.17 ல் உள்ள வரைபடத்தில் கண்டுள்ளபடி 1975/19 க்கு கட்டுப்பட்ட நிலமானது முக்கோணவடிவில் உள்ளது என்றால் சரிதான், மாறாக வாதி தரப்பில் எங்களுக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து 2 கழிவறைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஆணையர் பார்வையிட்டபோது தவறுதலாக காட்டப்பட்டுள்ளது.

1975/19 க்கு கட்டுப்பட்ட நிலமானது புலவரைபடத்தில் முக்கோண வடிவில் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நத்தம் நிலவரித்திட்டம் செய்த போது தவறுதலாக போடப்பட்டது. முக்கோண வடிவில் இருந்த நிலத்தை பி.வா.சா.ஆ.1 ன்படி எனது தாயார் செவ்வக வடிவிலான விஸ்தீரணம் கண்டு தானம் பெற்றிருப்பது தவறு என்றால் சரியல்ல, மாறாக நத்தம் நிலவரித்திட்டம் செய்வதற்கு முன்பே தானசெட்டில்மெண்ட் பதிவு செய்யப்பட்டது.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**